[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 மார்ச் 31

இந்த விவகாரம் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன், மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, விவரங்களை அறிந்தேன். இந்த விஷயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக மேலும் விவரங்களை அறிவதற்காக, வருவாய்க் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், காவல் இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் அலுவலர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு விசாரணை மேற்கொண்டார்கள்.

முற்பகல் 11–45

இன்று காலையில், மீண்டும் வருவாய்த் துறை மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவினர் அங்கு சென்று, மாணவிகள் மற்றும் நிருவாகத்தினருடன் பேசி வருகிறார்கள். மேலும், அங்குள்ள மாணவிகளின் பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அங்கு ஒரு பெண் ஆய்வாளர் தலைமையில் காவலர்கள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்தவரை, இந்த விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றச்சாட்டு உறுதியானால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என தங்கள் மூலமாகத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) திருப்பரங்குன்றம் தொகுதி, திருமுருகன் கோயில் மற்றும் பள்ளிக்கு அருகிலுள்ள மதுபானக் கடைகளை இடமாற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல்மிகு கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 31] [திரு. வி.வி. ராஜன் செல்லப்பா]

மதுரை மாநகராட்சி, திருப்பரங்குன்றம் தொகுதியில் முதல் படைவீடு அருள்மிகு திருமுருகன் கோயில் அமைந்துள்ள பகுதியில் திருக்கோயிலுக்குச் சொந்தமான பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2,000–க்கும் மேற்பட்ட மாணவிகளுக்குத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதில் என்ன பிரச்சினை என்பது குறித்து மட்டும் சொல்லுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: செய்தியை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். அங்கு அரசு மேல்நிலைப் பள்ளியும் அருகில் இருக்கிறது. பக்தர்கள் பயன்படுத்தக்கூடிய பழைய பேருந்து நிலையமும் அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில், அங்கு அரசு விதிமுறைகளுக்கு மாறாக, உரிமம் பெற்ற 5 மதுக்கூடங்களும், உரிமம் பெறாத மதுக்கூடங்களும் உருவாகியிருப்பதால், அந்தப் பகுதியில் செல்கின்ற மாணவ, மாணவிகள் அல்லலுறும் வகையில் மிகப் பெரிய இடையூறுகள் நடைபெற்ற காரணத்தினால், அந்தப் பள்ளியின் மாணவிகளும், மாணவிகளின் பெற்றோர்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) அங்கு 5 மதுபானக் கடைகள் இருக்கின்றன என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு)

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஒரேயொரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், சாலைக்கு வந்து போராடுகின்ற ஓர் அவலமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சாதாரண பொது வாழ்வில் இருப்பவர்கள் போராடுவதை விட்டுவிட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு)

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஒரேயொரு செய்தியை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். மாணவிகளும், அவர்களுடைய பெற்றோர்களும் சாலைக்கு வந்து போராடுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிற காரணத்தினால், அதனை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களை நான் பேச அனுமதித்திருக்கிறேன். பிரச்சினையை

[பேரவைத் தலைவர்] [2023 மார்ச் 31

நீங்கள் இங்கே பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: சொல்ல வேண்டிய ஒரேயொரு செய்தியை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், மதுக்கடைகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அது தேவையில்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில், குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதிகளில் நான்கு டாஸ்மாக் கடைகள் இருக்கின்றன. குறிப்பாக, அந்தக் கடைகள் அமைக்கப்பட்ட ஆண்டு, ஒரு கடை 10–8–2014, இன்னொரு கடை 18–4–2017, மூன்றாவது கடை 4–10–2017, நான்காவது கடை 1–7–2018. இந்த ஆண்டுகளில் நான்கு டாஸ்மாக் கடைகள் அங்கே அமைக்கப்பட்டு, செயல்பாட்டிலே உள்ளன. மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர், தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, முதன்முதலாக துறையினுடைய ஆய்வுக் கூட்டங்களை நடத்தியபோது, பள்ளிகள், கோயில்கள், தேவாலயங்கள் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய டாஸ்மாக் கடைகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும். தேவை ஏற்படின், அதை முழுவதுமாக மூட வேண்டுமென்று உத்தரவிட்டு, இந்த இரண்டாண்டுகளில் 97 மதுபானக் கடைகள், மூடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கூடுதலாக 173 கடைகள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த நான்கு மதுபானக் கடைகளும் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்ட கடைகளாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், துறையின் சார்பாக அந்த இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம்.

ஆய்வுக்குப் பிறகு, தேவை ஏற்படின், நிச்சயமாக அந்தக் கடைகள் இடமாற்றம் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

– – –

(அ) கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,405,61,18,000/–, மூலதனக் கணக்கில் ரூ.561,15,13,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*